குற்றவியல் நீதிமன்றம் தொடங்குவதற்காக, கடந்த ஆண்டும், அதற்கு முதல் ஆண்டும் மாவட்டத்தினுடைய தலைமை நீதிபதி பேராவூரணிக்கு வருகை தந்து அதற்குரிய இடங்களையெல்லாம் தேர்வு செய்தார். அதற்குரிய கட்டடத்தைக்கூட நாங்கள் இலவசமாக, வாடகை இல்லாமல் தருவதாகக்கூட ஒத்துக்கொண்டோம். இருந்தாலும், இதுவரை அங்கே நீதிமன்றம் துவங்கவில்லை. இந்த நிதி ஆண்டில் நீதிமன்றம் துவங்க மாண்புமிகு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தின்படி one time investment என்று சொல்லக்கூடிய அளவிற்கு வேண்டுமானால் அவர் தரலாம். ஆனால் recurring expenditure-க்கு யார் தருவது? எனவே, தொடர் செலவினத்தை நாம் கவனத்திலே கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே, நிதிச்சுமையின் காரணமாக அதைத் தற்போது செயல்படுத்த முடியவில்லை. நிதிநிலைமை சீரானபின், அதுபற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச்.எம். ராஜு.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இரண்டு தாலுக்காக்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. ஒன்று குந்தா தாலுக்கா; மற்றொன்று பந்தலூர் தாலுக்கா. குந்தாவிலிருந்து உதகைக்கு வருவதற்கு 33 கிலோ மீட்டர் தூரம் வரவேண்டியிருக்கிறது. அதேமாதிரி, பந்தலூரிலிருந்து கூடலூருக்கு வருவதற்கும் அதிக தூரம் இருக்கிறது. ஆகவே, இரண்டு புதிய தாலுக்காக்களுக்குமாகச் சேர்த்து குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்கள் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் சிரமம் இருந்தால், அதுபற்றிப் பிறகு யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 83, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்:

2002 ஏப்ரல் 4]

83—

குற்றவியல் நீதிமன்றம்

***13057—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தில் குற்றவியல் நீதிமன்றம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கு பார்த்தாலும் நாளுக்கு நாள் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கடத்தல், முறைகேடுகள், தீவிரவாதம் போன்ற குற்றங்கள் அதிக அளவிலே பெருகிக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை; இன்றுகூட பத்திரிகையைப் பார்க்கின்ற நேரத்திலே ஒரே நாளில் சென்னையை ஒட்டி இருக்கிற பகுதிகளிலே ஏழெட்டு கொலை, கொள்ளைகள். இப்படிப் பத்திரிகைகளுக்குத் தெரிந்த செய்திகள் இவ்வளவு என்று சொன்னால், தெரியாத செய்திகள் நிறைய இருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில், மக்கள் தொகை நிறைந்த, கிராமங்கள் நிறைந்த பகுதியான என்னுடைய பெண்ணாகரம் தொகுதியிலே District Munsif-*cum*-Judicial Magistrate Court, அதாவது, மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் இப்போது இயங்கிக்கொண்டிருக்கிறது. இதிலே வழக்குகள் நிறையத் தேங்கிக் கிடக்கின்றன. உதாரணத்திற்கு, சிவில் வழக்குகள், trial-இல் இருக்கக்கூடியவையே 700 வழக்குகள் நிலுவையிலே இருந்துகொண்டிருக்கின்றன. அந்த சிவில் வழக்குகள் திங்கள், வெள்ளி ஆகிய இரண்டு நாட்களிலே நடைபெறுகின்றன. கிரிமினல் வழக்குகள், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய 3 நாட்களிலே அங்கு நடைபெறுகின்றன. இப்போது trial-இலே இருக்கக்கூடிய வழக்குகள் 1650. F.I.R. stage-லே இருக்கக்கூடிய வழக்குகள் 1500.

இப்படி வழக்குகள் தேங்கியிருக்கிற காரணத்தினாலே, குற்றங்கள் பெருகி வரக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே குற்றவியல் நீதிமன்றம் என்பது அவசியத் தேவை என்பதை நாம் உணர்கிறோம். அதே நேரத்திலே, இப்போது இருக்கக்கூடிய நீதிமன்றத்திலே 11 மாத காலமாக Magistrate இல்லாமல், பொறுப்பு Magistrate வந்து பார்த்துக் கொண்டிருக்கிறார். இப்படிப் பணியிடம் காலியாக இருந்துகொண்டிருக்கின்றது. சொந்தக் கட்டடம் இல்லாமல் இருக்கிறது. நிலம் தயாராக இருக்கிறது. இதில் 5 காவல் நிலையங்கள் உள்ளடங்கி இருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட அவசிய, அத்தியாவசியத் தேவையைக் கருத்தில் கொண்டு, நடப்பாண்டிலே குற்றவியல் நீதிமன்றத்தை உருவாக்கித் தருவார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றங்களைத் தடுத்து விரைவாக நீதி வழங்குவதுதான் ஒரு அரசினுடைய முக்கியக் கொள்கையாக இருக்க முடியும். எனவே, இதனைக் கருத்தில் கொண்டுதான் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதிகமான அளவிற்கு நீதித் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதற்காகவே, இந்த ஒரு மாதத்தில்—நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற இந்த ஒரு மாதத்திலே—ஏறக்குறைய 8½ கோடி ரூபாய் அளவுக்கு நீதித் துறைக்கு ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10-15

அதுமட்டுமல்லாமல், 49 Fast Track Courts—விரைவு நீதிமன்றங்கள்—தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டு, பல வழக்குகள் தீர்வு செய்யப்பட்டிருக்கின்றன.

ஓர் ஆய்வு செய்தபோதுகூட ஏறக்குறைய 30 சதவிகிதம் அளவிற்கு விரைவாகவே தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. 'Justice delayed is justice denied' என்று சொல்வார்கள். காலந்தாழ்த்தப்பட்ட நீதி, மறுக்கப்படுகின்ற நீதி; அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை நம்முடைய அம்மாவுடைய ஆட்சியிலே வரக்கூடாது என்கிற வகையிலே, விரைவான நீதி வழங்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் பெண்ணாகரம் பகுதியிலே சில சின்னச் சின்னப் பிரச்சினைகள்

2002 ஏப்ரல் 4]

இருக்கலாம். அரசினுடைய கவனத்திற்கு எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே, அந்த Magistrate posting-ஐப் பொறுத்தவரையில் regular-ஆக நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதுமட்டுமல்லாமல், வழக்குகளினுடைய தேக்கத்தைப் பற்றி அவர் சொன்னார். ஆனால் ஏறக்குறைய மொத்தம் *1425* வழக்குகள்தான் தேங்கி இருக்கின்றனவேயொழிய, அவர் சொன்னது போல அவ்வளவு வழக்குகள் தேக்கம் இல்லை. அங்கேகூட ஒரு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, அதிலே ஒரு regular posting-ஆக Magistrate-ஐ நியமித்து intensive-ஆக துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் நிச்சயமாக அந்த வழக்குகள் எல்லாம் தீர்க்கப்பட்டுவிடும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட நீதிமன்றம் அமைந்துள்ளது. ஆனால், காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், காஞ்சிபுரம் தலைநகராக இருந்தாலும், மாவட்ட நீதிமன்றம் செங்கல்பட்டிலே அமைந்துள்ளது. ஆகவே செங்கல்பட்டிலுள்ள மாவட்ட நீதிமன்றத்தை காஞ்சிபுரத்திற்கு மாற்றவோ அல்லது குறைந்தபட்சம் Additional District Court காஞ்சிபுரத்திலே நிறுவுவதற்கோ அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநாவுக்கரசு, அண்ணா இருக்கும்போதே காஞ்சிபுரத்தை தலைநகராகக் கொடுத்துவிட்டு, நீதிமன்றத்தை செங்கல்பட்டிற்குக் கொடுத்து இருக்கிறார்கள். சட்ட அமைச்சர், விளக்கம் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு நீதிமன்றத்தை மாற்றுவதனால், அங்கே எந்தப் பிரச்சினையும் இதனால் எழக்கூடாது. எனவே, வழக்கறிஞர்களுடைய தீர்மானம், Bar Council-னுடைய தீர்மானம் மற்றும் பொதுமக்களுடைய கருத்து, உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரை, இவற்றை ஏற்று அந்த இடத்திலே ஒரு நீதிமன்றம் அமைப்பதற்கு மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.